பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 08 2024 **SUNDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி போன்ற தலைவர்களின் எண்ணங்கள் வலுசேர்க்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. கடல்சார் பாதுகாப்பில் கடலோர பாதுகாப்புப்படையினர் ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. குடியுரிமை திருத்தச்சட்டம் யாருடைய குடியுரிமையையும் பறிப்பதற்கானது அல்ல என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஆஸ்திரேலியா “ஏ” அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா “ஏ” அணி 171 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

<u>*-- இனி விரிவான செய்திகள் --*</u>

**<<<<<>>>>>**

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி போன்ற தலைவர்களின் எண்ணங்கள் வலுசேர்க்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணயம் இன்று சென்னையில் வெளியிடப்படுவதையொட்டி, அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார்.

பன்முக திறன் கொண்ட கருணாநிதி, தமது எழுத்துக்களால் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொண்ட முயற்சிகள் இன்றளவும் நினைவுகூரப்படுவதாக பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வரலாற்றில் தமது முத்திரையை வலுவாக கருணாநிதி பதித்துள்ளதாகவும் அவர் புகழாரம் சூட்டியுள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்காகவும், தமிழகத்தின் மேம்பாட்டிற்காகவும் அவர் அக்கறை செலுத்தியதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா பெரிய அளவில் வெற்றிபெற வாழ்த்துவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி அந்த வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார்.

பிரதமரின் இந்த வாழ்த்து செய்திக்காக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் நன்றி தெரிவித்துள்ளார்.

இதேபோல், மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி விடுத்துள்ள வாழ்த்து செய்திக்காகவும் முதலமைச்சர் நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

இன்னும் சற்றுநேரத்தில் நடைபெறவுள்ள இதற்கான விழாவில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இந்த நாணயத்தை வெளியிட உள்ளார்.

முன்னதாக, சென்னை மெரினா கடற்கரையில் உள்ள கருணாநிதியின் நினைவிடத்தில் திரு ராஜ்நாத் சிங் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

இதற்கிடையே, திமுக – பிஜேபி இடையே ரகசிய கூட்டணி உள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கருணாநிதி நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழாவில் மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பங்கேற்க உள்ளதை சுட்டிக்காட்டினார்.

இந்த விழாவிற்கு திமுக அதன் கூட்டணியில் உள்ள காங்கிரஸ் கட்சியை சேர்ந்த மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தியை அழைக்காதது ஏன் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழா வெற்றியடைய பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளதை அரசியலாக்கக்கூடாது என்று மாநில அமைச்சர் திரு மனோ தங்கராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்

நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் பொறுப்பில் அமர்ந்த பலர் கருணாநிதியை பாராட்டியிருப்பதை சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>

கடல்சார் பாதுகாப்பில் கடலோர பாதுகாப்புப்படையினர் ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

கடலோர காவல்படையின் நவீன வசதிகளுடன் கூடிய மீட்புபணிகளுக்கான ஒருங்கிணைப்பு மையத்தை இன்று சென்னையில் தொடங்கிவைத்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்ச்சியில், புதுச்சேரியில் உள்ள கடலோர காவல்படையின் விமான தளத்தையும் காணொலி வாயிலாக திரு ராஜ்நாத் சிங் தொடங்கிவைத்தார்.

<<<<<<>>>>>

குடியுரிமை திருத்தச்சட்டம், யாருடைய குடியுரிமையையும் பறிப்பதற்கானது அல்ல என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று அகமதாபாதில் குடியுரிமை சான்றிதழ்களை 188 பேருக்கு வழங்கி அவர் பேசினார்.

நம் நாட்டிற்கு அகதிகளாக வந்தவர்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் குடியுரிமை சான்றிதழ்கள் வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

நாடு முழுவதும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை செயல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

விருதுநகர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வுப்பணிகள் போது ஐந்தாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த புள்ளிகள் பொறிக்கப்பட்ட சுடுமண் முத்திரை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்த அகழாய்வுப்பணிகள்போது 30 சுடுமன் முத்திரை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் டைட் - கமலக்கண்ணன் - 36 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

*(சவுண்ட் டைட் - செந்தாமரை கண்ணன் - 49 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.

<<<<<<>>>>>

திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி அணையிலிருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

மாநில அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் தண்ணீரை திறந்துவிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

*(சவுண்ட் பைட் - சாமிநாதன் - 45 செகண்டஸ்)*

<<<<<<>>>>>

கொடைக்கானலுக்கு செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தொடர் விடுமுறை காரணமாக அதிக எண்ணிக்கையில் சுற்றுலா பயணிகள் கொடைக்கானலில் குவிந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - சரவணன் - 30 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நீலகிரி மாவட்டம் அரசு மகப்பேறு மருத்துவமனையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி நிஷா இன்று ஆய்வு செய்தார்.

-------------------

புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் முகாம் நாளை மறுநாள் விராலிமலை மற்றும் அன்னவாசல் பகுதிகளில் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி மு.அருணா கூறியுள்ளார்.

-------------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் ஓய்வுபெற்ற பாதுகாப்புப்படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு பாராட்டு விழா இன்று நடைபெற்றது.

-------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வளர்இளம் பெண்கள் ஆரோக்கியம் மற்றும் உரிமைகள் குறித்த நடைபயண பிரச்சாரம் இன்று நடைபெற்றது.

--------------

தாம்பரம் ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்பு மேம்பாட்டுப்பணிகள் இன்று நிறைவடைந்ததையடுத்து சென்னை பீச் - செங்கல்பட்டு இடையேயான மின்சார ரயில் சேவை இன்று முதல் வழக்கம் போல் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

------------------------

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நடைபெற்றுவரும் சாரல் திருவிழாவின் ஒருபகுதியாக ஆணழகன் பளுதூக்கும் போட்டியை ஆட்சியர் திரு கமல்கிஷோர் தொடங்கிவைத்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டு செய்திகள்*

ஆஸ்திரேலியா "ஏ" அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா "ஏ" அணி 171 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

Mackay –யில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 243 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக Raghvi Bist 53 ரன் எடுத்தார்.

244 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த ஆஸ்திரேலியா தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி, 22 புள்ளி ஒரு ஓவரில் 72 ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக Maddy Darke 22 ரன் எடுத்தார்.

எஞ்சியவர்கள் சொற்ப ரன்னுக்கு விக்கெட்டுகளை பறிகொடுத்தனர்.

Priya Mishra அபாரமாக பந்துவீசி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

<<<<<<END>>>>>